**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.109/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-6/PW- 3 | Village: |
| Name : செல்வமணி | Age :53 |
| Father's/Husband's Name : தையான் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 02.05.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது அழகிரினாதன்பேட்டை வசித்து வருகிறேன். நான் எல்ஜசி முகவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 28.11.2018 ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் துளுக்கவெளி காலனி அருகே நானும் எனது 2 நண்பர்களும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது எனக்கு தெரிந்த சதானந்தம் என்பவர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்னை நெடுஞ்சாலையில் சாலை ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் கன்ட்ரோல் இல்லாமல் வந்த கார்த்திக் வித்யாலயா பள்ளி வேன் அவர்

மீது மோதியது. அதனால் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. கை மற்றும் கால்களிலும் காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி விபத்து ஏற்படுத்திய வேனை ஓட்டி வந்த ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் அப்போது கூட்டமாக இருந்ததால் வேனின் ஓட்டுநரை பார்க்க முடியவில்லை. பின்னர் போலிசார் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதற்காக என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்படி பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.109/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-4/PW- 2 | Village: | |
| Name | : கார்த்திக் | Age | :28 |
| Father's/Husband's Name | : காமராஜ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 02.05.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது சோழபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன், கடந்த 2018 ம் வருடம் ஒருநாள் துளுக்கவெளி கிராமத்தில் உள்ள பள்ளி விடுதி அருகே சதானந்தம் என்பவர் விபத்தில் அடிபட்டு கிடந்தார். நாங்கள் சென்று அவரை பார்த்து ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் எங்களை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.109/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: | |
| Name | : மதியழகன் | Age | :68 |
| Father's/Husband's Name | : சின்னையன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 02.05.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது சோழபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன், இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சதாநந்தம் எனது சித்தப்பா ஆவார். கடந்த 2018ம் வருடம் ஒருநாள் எனது சித்தப்பா சதாநந்தம் துளுக்கவெளி காலனியில் உள்ள அவரது வீட்டிலிருந்து டீ குடிப்பதற்காக கும்பகோணம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து சென்ற போது பின்னால் வந்த கார்த்திக் வித்யாலயா பள்ளி வேன் அவர் மீது மோதி அடிபட்டதாக தகவல் கேள்வி

பட்டு உடனே சம்பவம் இடம் சென்று பார்த்தேன். அப்போது சதாநந்தம் தலையில் அடிபட்டு அங்கு கிடந்தார். கார்த்திக் வித்யாலயா பள்ளி வேனும் அங்கிருந்தது. அந்த வேனை ஓட்டி வந்த ஓட்டுநர் மதுபோதையில் இருந்ததால் அவரை பிடித்து ஒரு வீட்டில் வைத்திருந்தார்கள். அந்த ஓட்டுநரை தற்போது பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் அப்போது பார்த்தேன். தற்போது எனக்கு ஞாபகமில்லை. அடிபட்ட எனது சித்தப்பாவை ஆம்புலன்ஸ் மூலமாக கும்பகோணம் அன்பு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துகல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சையில் இருநத எனது சித்தப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னார் இதுகுறித்து நடவடிக்கை வேண்டி திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான் ( **மேற்படி புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**